இத்தாலியின்
உற்பத்தி
உங்கள் சவாரிக்கு
வெஸ்பா VESPA
ஸ்கூட்டர்கள்
எதற்கும் ஒருமுறை நாடுங்கள்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 20 ஆவணி 15 றம்ழான்: 26 இதழ்: 201
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 31-8-78

திருமணங்களா?
திருவிழாக்களா?
பண்டிகைகளா?
உற்சவங்களா?

உங்கள் தேவைகளை
நிறைவு செய்வோம்
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

உற்பத்தியாளருக்கு ஊக்கமளிக்க

# மிளகாய் வெங்காயம்

# இறக்குமதிக் கட்டுப்பாடு

## அவசியம் ஏற்பட்டால் மாத்திரமே இறக்குமதி


### பிரதியமைச்சர் நடத்திய மாநாட்டில் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

**உற்பத்தியாளருக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் செத்தல்மிளகாய், வெங்காய இறக்குமதியைக் கட்டுப்படுத்தி உற்பத்திப் பாதிப்பு ஏற்படும் காலத்தில் கட்டுப்பாடு அவசியம் ஏற்பட்டால் இறக்குமதி செய்வதென்ற ஆலோசனை நேற்று திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நடநத மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப் பட்டது.**

உணவு கூட்டுறவு பிரதி வரவேற்று அங்கு வந்த உத்தி அமைச்சர் திரு. சபரசிற் யோகத்தர்களை அறிமுகம் இந்த மாநாட்டை கூட்டி செய்துவைத்தார். யிருந்தார். பிரதிஅமைச்சரை பிரதியமைச்சர் திரு. அமர யாழ்ப்பாணம் எம். பி. சிறி தலைமையில் நடந்த திரு. வெ. யோகேஸ்வரன் மாநாட்டில் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம், சந்தைப்படுத்தும் திணைக்கள யாழ் கிளை அதிபர் திரு. என். ரி. சிவஞானம் விவசாய உற்பத்தியாளர் சங்க உபதலைவர் திரு. க. வேலாயுதபிள்ளை, யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ, முன்னாள் அரசாங்க அதிபர் திரு. எம். சிறிகாந்தா மற்றும் விற்பனை இலாகா கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் இடம் பெற்ற கலந்துரையாடலின் விபரம் நாளை வரும். (க)



எதிர்க்கட்சித் தலைவரும், தமிழா விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கத்தின் 51வது பிறந்த நாளையொட்டி கடந்த 27ந் திகதி யாழ் நகரில் இடம்பெற்ற நிகழ்ச்சியின்போது எடுக்கப்பட்ட படம். மலர்மாலைகள் கழுத்தை அலங்கரிக்கப் புன்னகையுடன் காணப்படும் அமிர்தலிங்கம் தம்பதிகளுடன் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் காணப்படுகிறார்.

## பெண்ணைக் கடத்தினராம் இருவர் றிமாண்டில்

### 6 பேரைப் பொலிஸ் தேடுகிறது

(மாவிட்டபுரம்)

விளானில் இடம்பெற்ற பெண் கடத்தல் சம்பவம் ஒன்று தொடர்பாகக் கைதான இரு சந்தேக நபர்கள் மல்லாகம் நீதவானால் றிமாண்டில் வைக்கப்பட்டனர். இது தொடர்பாக மேலும் அறுவர் சங்கானைப் பொலிசாரால் தேடப்பட்டு வருகிறார்கள்.

விளானைச் சேர்ந்த இளம் பெண் ஒருவருக்கும் சங்கானையைச் சேர்ந்த வாலிபர் ஒருவருக்குமிடையில் காதல் தொடர்பு இருந்து வந்ததாகவும், இது தொடாபாக திருமணப் பேச்சுக்கள் நடந்த போது பெண்ணின் பெற்றோர் அதற்கு மறுத்து விட்டதன் காரணமாக ஒரு கோஷ்டி பெண்ணின் வீட்டுக்குச் சென்று அவசரத்தில் காதல் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பெண்ணின் சகோதரியைக் கடத்திச் சென்றதாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

இதுகுறித்து விளானைச் சேர்நத மாட்டின் செல்லையா என்னும் நபர் சங்கானைப் பொலிசில் செய்த புகாரையடுத்து தீவிர தேடுதல் வேட்டையிலீடுபட்ட பொலிசார் மேற்படி பெண்ணை கடத்தல்காரர்களிடமிருநது மீட்டதுடன் சந்தேகத்தின் பேரில் சங்கானையைச் சேர்ந்த சைபன் அன்ரன், சைமன் யோகதாஸ் ஆகிய நபர்களைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். இவர்களை அடுத்த மாதம் 6-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்

அத்துடன் பொலிசார் இது தொடர்பாக அறுவரைத் தேடி வருகின்றனர். (அ)

## பாப்பரசருக்கு ஜனாதிபதியின் வாழ்த்து

(கொழும்பு)

சமாதானமும் நீதியும் நிலவும் மனித குலத்திற்கு பாப்பரசர் முதலாவது அருளப்ப சின்னப்பரின் தலைமையும் வழிநடத்தலும் பெரிதும் துணைபுரியும்.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன புதிய பரிசுத்த பாப்பரசருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகில் சமாதானத்தையும் நீதியையும் நிலைநாட்ட பாப்பரசர் மேற்கொள்ளும் முயற்சி வெற்றிபெற தமது

(6ம் பக்கம் பார்க்க)

## களவுபோன 20 சயிக்கிள்களை சங்கானைப் பொலிஸ் மீட்டது

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பொலிஸ்வட்டாரத்தில் களவாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டதாகக் கருதப்படும் 20-க்கும் அதிகமான சைக்கிள்களை நேற்றையதினம் சங்கானைப் பொலிஸார் கைப்பற்றி மீட்டுள்ளனர்

குற்றச்செயல் ஒன்றில் சந்தேகத்தின் பேரில் கைதாகிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ செல்ரை ஜா என்பவரின் வாக்குமூலத்தையடுத்து இக் களவு சைக்கிள்கள் பிடிபட்டுள்ளனவாம். சங்கானைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜனாப் ஜி. ஏ மிஸ்கின் தலைமையில் சென்ற கோஷ்டியினர் இக்களவு சைக்கிள்களைக் கைப்பற்றினர் இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவந்துள்ளதாவது:- சங்கானை தேவாலய வீதியில் வீடு உடைத்து திருடப்பட்ட சம்பவத்தில், சந்தேகத்தின் பேரில் ஏ செல்ரை ஜா கைதானார். இவர் அளித்த வாக்குமூலத்தையடுத்து சண்டிலிப்பாய் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த செல்லத்துரை சிவபாதம் திடீரென கைது செய்யப்பட்ட அசமயம், அவரது வீட்டில் 10 களவு சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றைவிட, இவரால் விற்பனை செய்யப்பட்டதாகக் கருதப்படும் 10-க்கு அதிகமான சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்டுள்ள சைக்கிள்கள் அடையாளம் காண்பதற்காக சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## விற்பனைக்கு

குஞ்சுப்பரந்தன் சந்திக்கருகாமையில் நீர்ப்பாசன வசதியுள்ள 6 ஏக்கர் திறமான நெற்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. வே. தி. சம்பந்தர், கீதாஞ்சலி, டச்சு வீதி, சாவகச்சேரி. 0178

## தேவை

யாழ். நகரில் பிரபல்யம் வாய்ந்த ஸ்தாபனத்திற்கு பென்ஸிகுட்ஸ் வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்த ஆண் சேல்ஸ்மேன் தேவை. 10-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 0187, C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 0187

புத்தகம், கொப்பிகட்டுதல், பாக் ஒட்டுதல் போன்ற வேலைகளுக்கு பெண் பிள்ளைகள் தேவை. சனிக்கிழமை நேரில்வரவும். இரகுநாதன் பதிப்பகம், 3 நவீனசந்தை. யாழ்ப்பாணம், 0197

## கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் வேலைக்கு சீல் வைத்த கேள்வி விண்ணப்பங்கள் 12-9-78ம் திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பிக்க விரும்பும் பதிவு செய்த கொந்தராத்துக்காரர் கேள்விப் பிணைப்பணமாக ரூபா 50/-ம் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 15/-ம் 7-9-78ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிவரை இக்காரியாலயத்தில் கட்டி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை வட்டுக்கோட்டை கிராமாட்சி மன்றப்பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

### வேலை விபரம்

1. சித்தங்கேணிப் பிள்ளையார் கோவிலிலிருந்து துறட்டிப்பனை அம்மன் கோவிலுக்குப் போகும் வீதி.
2. கலைநகர் வீதி.
3. பச்சோந்தைஅரசடிவீதி.
4. தாவளை ஓடக்கரை வீதி.

மு. சுப்பிரமணியம்,
நிர்வாகஸ்தர்,
கிராமாட்சி மன்றம்,
வட்டுக்கோட்டை.

கிராமாட்சி மன்றப் பணிமனை,
வட்டுக்கோட்டை,
29-8-78. 0192

## புதுக்குடியிருப்பு கிராமச் சபையின் கேள்வி விளம்பரம்

புதுக்குடியிருப்பு கிராமச் சபையின் நூல்நிலையக்கட்டிடம் விஸ்தரிப்பு என்னும் வேலைக்கு சீல்வைத்த கேள்விகள் புதுக்குடியிருப்பு கிராம சபையின் விசேட ஆணையாளரால் 1978ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14ந் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2 கேள்விகள் விசேட ஆணையாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும். அதன் பிரதி அதேநேரத்தில் கிடைக்கக்கூடியதாக வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கட்கு அனுப்பப்பட வேண்டும்.

3. கேள்விப் பிணையாக, ரூபா 75-00ம், பத்திரப்பணமாக ரூபா 10-00ம் 12-9-78ந் திகதி பிற்பகல் 4-00 மணிவரை கட்டியதன் பேரால் கேள்விப் பத்திரம் வழங்கப்படும்.

4. கேள்விகள் ஏற்கப்பட்டதென அறிவிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் பிணைப்பணத்தைக்கட்டி ஒப்பந்தம் எழுதுவதுடன் மூன்று மாதங்களுக்குள் வேலைபூர்த்தி செய்யப்பட்டு கையளித்தல் வேண்டும்.

5. மேலதிகமான விபரங்கள் யாவும் கிராமச் சபைக் கந்தோரில் காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வை. நீலகண்டன்,
விசேட ஆணையாளர்,
கிராமப் பிரதேசம்,
25-8-78 புதுக்குடியிருப்பு.
0193

## நவீல்ட் பாடசாலை இல்லப்போட்டி

(வண்ணார்பண்ணை)

இலங்கையில் இயங்கும் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலைகளில் ஒன்றான கைதடி நவீல்ட் செவிபுலன்ப் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த இல்லவிளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றது.

இக்கல்லூரிஅதிபர் திரு.ஏ. எஸ். டேவிட் தலைமையில் நடந்த இப்போட்டிக்கு கல்வி அபிவிருத்தி அதிகாரி திரு. சி. பொ. சிவபாதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி சிவபாதம் பரிசில்களை வழங்கினார். தங்க இல்லம், பச்சைஇல்லம், சிவப்பு இல்லம் ஆகியமூன்று பிரிவுகளில் இம்முறை தங்கஇல்லம் முதலாவது இடத்தையும் பச்சை இல்லம் இரண்டாவது இடத்தையும் சிவப்பு இல்லம் மூன்றவது இடத்தையும் பெற்றன (அ)

## பதவி உதவியாளராக நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கமநல சேவைத் திணைக்களத்தின் பிரதம எழுதுவினைஞராக கடமையாற்றி வந்த திரு. ஏரம்பு சண்முகநாதன் இத்திணைக்களத்தின் பதவி உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. சீ. திலகரத்திரனம் ஓய்வுபெற்றதையடுத்து இப்பதவிக்கு திரு. சண்முகநாதன் பதவியுயர்த்தப்பட்டார். பல ஆண்டுகளாக இத்திணைக்களத்தின் பிரதம எழுதுவினைஞராக கடமையாற்றிய சண்முகநாதன், அதிகாரிகளினதும் ஊழியர்களினதும் பொது மக்களினதும் ஏகோபித்த பாராட்டுதல்களைத் தமது திறமையான சேவை மூலம் சம்பாதித்து வந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

இவரது பிரதம எழுதுவினைஞர் பதவிக்கு இதே திணைக்களத்தைசேர்ந்த என். சண்முகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். [கி-உ]

## சொற்பொழிவு

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி குருகுல ஆதரவின் கீழ் செப்டெம்பர் மாதம் 7-ம் திகதி தொடக்கம் பாடசாலை நேரங்களில் தினமும் கிளிநொச்சி பரந்தன் மாவட்டப் பாடசாலைகளில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா சமயச் சொற்பொழிவுகளை நடாத்தவுள்ளார்.

பாடசாலைப் பிள்ளைகளின் சமயஅறிவைப் பெருக்குவதற்காக 'சமய வழிபாட்டு முறைகள்' என்னும் பொருள் பற்றி தொடர்ந்து சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (உ)

## வீரகத்தியின் நல்லைக் கந்தன் கீர்த்தனைகள்

பண்டிதர் க. வீரகத்தி எழுதிய 'கந்தனே என் சிந்தனை நல்லைக் கந்தனே என் வந்தனை...' என்னும் கீர்த்தனை நூல் ஒன்று அண்மையில் வெளிவந்துள்ளது. நல்லைக் கந்தன் ஆலய விழா நடைபெறும் இந்த நேரத்திலே இக்கீர்த்தனை நூல் வெளிவந்தது பயனுடையதாகும்.

பண்டிதர் 'கவீ' கவிதை இலக்கியம், இலக்கணம் ஆகிய துறைகளில் ஈழத்து இலக்கியப் பரப்பில் முனைப்பாக நிற்பவர். அவரின் கூர்த்தமதிக்கும், இலக்கிய ஆளுமைக்கும், கவித்துவத்துக்கும், இச்சிறு நூல் ஒரு பதச்சோறாக அமைந்துள்ளது எனலாம்.

மிகஅழகான சொற்களை நளினமாகக்கையாண்டு ஆழமான கருத்துக்களைக் கூறக் கீர்த்தனங்கள் ஒரு நல்ல சாதனம் எனும் உண்மையைக் கைக்கு அடக்கமான இந்நூல் உணர்த்துவதாயுள்ளது.

'கவீ'யின் பக்தி அனுபவத்தை நூல்முழுவதும் தரிசிக்கலாம் சோற்றுப்படைக்கோர் ஆற்றுப்படைஎனனும் கீர்த்தனத்தில் ஆசிரியரின் சமூக நோக்குப் புலனாகின்றது,

எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கின்ற கவிஞரின் மனிதாபிமானம் நாவில் மிளிர்கின்றது. ஆண்டவனிடம் ஏழைகளின் நிலைபற்றிக் கவிஞரின் கவிஞர் எடுத்துரைக்கும் பாங்கு அருமையாயுள்ளது. முருகனை முருகம்மாவாக உருவகித்து கீர்த்தனம் பாடியது தமிழுக்குப் புதிது. ஆழ்வார்களும் பாரதியும் கண்ணனைப் பலவகை உறவு முறையில் பாடியுள்ளமையை இது நினைவூட்டுகிறது. கல்லூரி உள்ள புத்தகசாலை அனைத்திலும் கிடைக்கும். விலை ஒரு ரூபாதான்.

எஸ். சிவலிங்கராசா
யாழ்.வளாகம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. ஈடு 14463

மல்லாகம் — 1. சுப்பிரமணியம் சின்னத்தம்பியும் பெண்
தற்பொழுது — 2. சுந்தரநாயகியும்-இவர்கள் தங்கள்
சிங்கப்பூர் — அற்றேனித் தத்துவக்காரன்
மல்லாகம் சுவாமிநாதர் தம்புமூலம்
வாதிகள்

எதிராக

27, பலாலி ரேட்டு — 1. ஆறுமுகம் வெற்றிவேலு
வண்ணார்பண்ணை கிழக்கு — மாணிக்கவாசகரும் பெண்
யாழ்பபாணம் — 2. விமலாதேவியும்
பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 14463ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25-ந் திகதி (25-9-78) திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 20980/-ம், 23-7-74 தொடக்கம் 4-9-75 வரைக்கும் ரூபா 15,000/-க்கு 12வீத வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை 5 வீத வட்டியும், வழக்குச்செலவு ரூபா 761-26 சதமும் தீர்வைத் தொகையில் கொடுபட்ட ரூபா 1,500/-ம் மேலும் மேற்கூறிய தொகையில் 11-3-76ல் கொடுபட்ட ரூபா 5,000/-ம், 23-1-78ல் கொடுபட்ட ரூபா 10,000/-ம் கழிபடல் வேண்டும். இந்த விற்பனவு ஆணையை திருப்பி வழங்குவதற்குரிய முத்திரைச் செலவு ரூபா 21/-அறவிட வேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை, ''மாவடியும் இலகடியும்'' நிலப்பரப்பு 7 குளி 3 ½ல் 23-5-1965ல் நில அளவையாளர் எஸ். ஏகாம்பரம் அவர்களால் 710-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் 1ம் துண்டெனக் கண்டிருக்கும் நிலப்பரப்பு 3ம் வீடும் கிணறும் அதற்குச்சேர்ந்தவைகளும். இந்த நிலப்பரப்பு மூன்றுக்கும் எல்லை கிழக்கு பலாலி ரேட்டு வடக்கும் மேற்கும் இதன் மிகுதி ஆதனமான தியோடர் பிரெட்ரிக் கிறிஸ்தோபர் கிறெப்ரனுக்கும் பெண் செல்வரத்தினத்திற்குமுரிய ஆதனம். தெற்கு நாவலர் ரேட்டு. இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

செ. பாண்டித்துரை
கொமிஷனர் விலைமதிப்பாளர்.

மல்லாகம்,
16-8-78. 0194

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு/701

வயிரவி கதிரவேலு, வல்வெட்டி.
வாதி

எதிராக

நடராசா தேவரத்தினமும் பெண்
ரேசலீனும்
அந்தோனிப்பிள்ளை இராசநாயகம் சகலரும்
பெரியகாட்டுத் தேவன்துறை, காங்கேசன்துறை.
பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு காணிகள் 1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28-ந் திகதி (28-9-78) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிக்கு ரூபா 5500/-வும் மேலும் ரூபா 5000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 20 வட்டி விதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு வைகாசி மாதம் 29-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகயுயாகிய 1975-ம் ஆண்டு மார்கழிமாதம் 5-ந் திகதி வரைதிமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 662-65 கொடுக்கவேண்டியிருப்பதாலும் 28-7-78 இதுவரை கொடுக்கப்பட்ட ரூபா 1500/- கழித்து மிகுதி அறவிடப்படும்.

### ஆதன இடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டி கோவிற்பற்று ''பெரியகாட்டுத் தேவன்துறை'' புதுக்காடு நில. பர. ($1\frac{1}{2}$) ஒன்றரையும் இதற்கு எல்லை கிழக்கு சந்தியாப்பிள்ளை சின்னப்புவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு மரியாம்பிள்ளை அல்போன்ஸஸ் பெண் சிசிலியா புஸ்பராணிக்கும் பங்காளருக்குமுரியவாதனப், தெற்கு விசேந்திப்பிள்ளை செபமாலைக்கும் மறுபேருக்குமுரியவாதனம் இதடங்கலும்.

. மேற்படி இறை மணற்குண்டு அல்லது தாளையடி வளவு (11) பதினொரு குளி இதற்கெல்லை கிழக்கு வல்லிபுரம் இராமசாமியின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு கடல், மேற்கு ஐயா முத்து நடராசா பெண் இளையபிள்ளையின் ஆதனம், தெற்கு ஞானமுத்து பெண் விக்ரோறியாபிள்ளையினுதனம் இதடங்கலும்.

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.,
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்'',
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
1-8-78. 0185

## ஆசிரியர் தேவை

க. பொ. த. (உயர்தர) வகுப்பில் இரசாயனவியல் கற்பிக்கக்கூடிய தற்காலிக ஆசிரியர் தேவை. 8-9-78க்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்.
கொக்குவில் இந்துக்கல்லூரி,
30-8-78 சொக்குவில். 0191

## காணி தேவை

திருநெல்வேலி, கோண்டாவில் பகுதியில் யாழ்ப்பாணம் — பலாலி வீதியிலோ அல்லது ஸ்ரோப்பாய் பகுதியில் யாழ் பாணம் ராஜ வீதியிலோ ஒரு ஏக்கருக்கு மேற்பட்ட காணி விற்பனை செய்யவுள்ளோர் சகல விபரங்களுடனும் பின் வரும் விலாசதாரருடன் கடிதமூலம் விரைவில் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: 0180,
C/o ஈழநாடு,
0180 யாழ்ப்பாணம்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

The Eelanaadu

## பனைஓலைப் பொருட்கள்

பனந்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இயங்கும் சாவகச்சேரி இளைஞர் நல்வாழ்வுக் கழகத்தினரால் உருவாக்கப்படும் பனைஓலைப் பொருள்கள் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. இது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

சாவகச்சேரி இளைஞர் நல்வாழ்வுக் கழகத்தினர் அண்மையில் பனைஓலைப்பின்னல் வேலைத் தொழிற் பேட்டையொன்றையும் ஆரம்பித்திருக்கிறார்களாம். இத்தொழிற் பேட்டையில் படித்த இளம் பெண்கள் நியமிக்கப்படுவார்களென்றும் நாளொன்றுக்கு பன்னிரெண்டு ரூபாய் முதல் பதினன்கு ரூபாய்வரை சம்பாதிக்க முடியுமென்றும் கழகத்தினர் கருதுகின்றனர்.

கழகத்தின் இந்த முயற்சிக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கவேண்டியது அரசினதும் பொதுமக்களினதும் பொறுப்பும் கடமையுமாகும்.

தொழிற்பேட்டைக்குத் தெரிவுசெய்யப்படும் இளம் பெண்களுக்குத் தகுந்த நிபுணர்களைக்கொண்டு பயிற்சியுமளிக்கப்படவிருப்பது வரவேற்கத்தக்கதாகும்,

அதிகம் படிக்காத வயோதிபப் பெண்கள் பலர் இன்றும் பனைஓலைப்பொருட்களை கலையழகுடன் இழைத்து வருவதை வடக்கின் பல கிராமங்களில் காணமுடியும்.

தொழிற்பேட்டையில் படித்த இளம் பெண்களுக்குப் பயிற்சி அளித்துத் தொழில்வாய்ப்பும் பெற்றுக்கொடுப்பதுடன் கிராமப்புறங்களில் உற்பத்தி செய்யப்படும் பனைஓலைப் பொருட்களையும் சந்தைப் படுத்துவதற்கு இந்த இளைஞர் நல்வாழ்வுக் கழகத்தினர் முன்வருவதும் நல்லது.

பனைவள அபிவிருத்திச் சபைக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பனந்தோட்டங்கள், பனம்பொருள் உற்பத்தியாளர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், இப்பொருள்களை வாங்கி விற்போர், தரகர்கள், பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோர் ஆகியோரைப் பதிவு செய்யும் அதிகாரங்கள் இச்சபைக்கு வழங்கப்பட்டிருப்பது இளைஞர் நல்வாழ்வுக் கழகம் போன்று பனம்பொருள் உற்பத்தியிலீடுபட முன்வரும் கழகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

பனைஓலைப் பொருள்களுக்கும் பனம்பொருள்களுக்கும் தென்னிலங்கையிலும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலும் நல்ல கிராக்கியிருக்கின்றது.

தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனம்பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம் பெருந்தொகையான அந்நியச் செலாவணியை இந்தியா சம்பாதிக்கிறது.

சாவகச்சேரி இளைஞர் நல்வாழ்வுக் கழகத்தினர் முன்மாதிரி காட்டியிருக்கின்றனர். இதுபோன்ற முயற்சிகளை இதர பகுதிகளிலும் மேற்கொள்வதற்கு இளைஞர்கள் முன்வரவேண்டும்.

## கிழக்கு மாகாணத்திலுள்ள

# அகதிகள் மறுவாழ்வுக்கு 30லட்சத்து63ஆயிரம்ரூபா!

## சுவிஸ்உதவியுடன்சர்வோதய சிரமதான சங்கம் வழங்கும்

[மட்டக்களப்பு]

சுவிட்சர்லாந்து—'ஹெலிட்டார்' நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கம் கிழக்கு மாகாணத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென 30 லட்சத்து 63 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. முக்கியமாக இவ்வொதுக்கீடு ஆகஸ்ட் கலவரத்தின் போது இம் மாகாணத்தில் அகதிகளாக வந்துள்ள குடும்பங்களின் புனர்வாழ்வு, பொருளாதார விருத்திகளுக்கு பயன்படுத்தப்படும்.

மேற்படி சிரமதான சங்கம் சமீப காலமாக கிழக்குப்பிராந்திய அபிவிருத்தியில் அக்கறை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக மேற்படி பிராந்திய இணைப்பாளர் திரு. எஸ். சுரேஷ்குமார், 'ஈழநாடு' நிருபரிடம் கூறுகையில்

மேற்படி 'ஹெலிட்டா' நிறுவனப் பிரதிநிதி திரு. தொமஸ் சிமென் சமீபத்தில் மாநில இணைப்பாளருடன் அகதிகளுள்ள பகுதிகளுக்கும் ஏனைய அபிவிருத்தி முயற்சிகளுக்கென தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களுக்கும் விஜயம் செய்து அகதிகள் பிரச்னை கிராமங்களின் பொருளாதார நிலைமைகளையும் தெரிந்து கொண்டார். அகதிகளின் புனர்வாழ்வுக்கும் பொருளாதாரவிருத்திக்குமென 8 லட்ச ரூபாவை சங்கம் செலவிடுவதென அங்கீகரித்துள்ளது. இவ்வொதுக்கீட்டிலிருந்து மீன்பிடி, விவசாயம், பயிர்ச்செய்கை, கைத்தொழில் போன்ற துறைகளுக்கெனவும், குடியிருப்பு வசதி, நிரந்தர பாலர் கல்வி நிலையம், கிணறு, மலகூடம் போன்ற தேவைகளுக்கும் பங்கீடு செய்யப்படும். மேற்படி திட்டத்தின் கீழ் அகதிகள் குடியேறியுள்ள கல்குடாத் தொகுதியிலுள்ள வடமுனை, புதிய கதிர்காமம், பனிச்சங்கேணி ஆகிய இடங்களிலும் மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள தாளங்குடா உறுகாமம் ஆகிய இடங்களிலும் அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளில் மாநில இணைப்பாளராக நான் தீவிரமாக ஈடுபட்டுள்ளேன் என்றார்.

கிராமஅபிவிருத்தித்திட்டத்தின் கீழ் பின்வரும் கிராமங்களும் சுவிட்சர்லாந்து உதவித்திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளன. அவை பற்றிய விபரம்பின்வருமாறுஎனத்தெரிவிக்கப்பட்டது.

பாவற்கொடிச்சேனை 1இலட்சத்து 48 ஆயிரம் ரூபா, ஈச்சந்தீவு ரூ.75 ஆயிரம், கொத்தியாபுலை ரூ. 1 இலட்சத்து 36 ஆயிரம். மகிளூர் முனை ரூ. 1 இலட்சத்து 36ஆயிரத்து 600, பூநொச்சிமுனை ரூ 1இலட்சத்து 6 ஆயிரத்து 600, கிரிக்குடா ரூ.2 இலட்சத்து 31 ஆயிரத்து 500 மியாங்கல்குளம் ரூ. 1 இலட்சத்து 13 ஆயிரத்து 400,

(4-ம் பக்கம் பார்க்க)

"அரசகரும மொழித்தகைமை:

## பேச்சுவார்த்தை பயனில்லையேல் நேரடி நடவடிக்கை"

(கொழும்பு)

"அரசகருமமொழித் தகைமையின்மையால் பதவிஉயர்வு பெறுமல் இருக்கும் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் பேச்சுவார்த்தை பலனளிக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நடவடிக்கைஎடுக்கவேண்டும்"

மேற்கண்டவாறு கூறும் தீர்மானம் கொழும்பில் நடந்த அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் கணக்காய்வுத் திணைக்களக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக்கிளையின் தலைவர் திரு. வீர. வேலாயுதம் தலைமையில் கணக்காய்வுத் திணைக்கள விரிவுரை மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

"எமது தாய்ச்சங்கமான அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியில் பலம்வாய்ந்த சங்கமாக இருந்தும், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளித்து தமிழ்த் தொழிற்சங்க உறுப்பினர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தும் வகையில், இச்சங்கக் கிளைகளிடையே விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளித்து நடப்பதை இக்கிளை கண்டிப்பதுடன், தமிழ் இனத்தின் ஒற்றுமைக்கு வழிவகுக்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றது.

"இத்திணைக்களத்திற்கு பரிசோதனை உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுக்கும்போது இதே திணைக்களத்தில் நீண்டகாலமாகச் சேவையாற்றி வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். தற்பொழுது ஏழுவருடம் சேவை பெற்றவர்களே பரிசோதனை உத்தியோகத்தர்களாகச்சேர்க்கப்படுவர் என்றிருப்பதை மாற்றி, இதற்குப் பத்துவருட சேவை தேவை என்பதை நடைமுறைப்படுத்தும்படி இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது"

"இச்சங்கத்திற்கும் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் இன்னல்வந்தபோது அவற்றை நீக்க உதவிகள் புரிந்த அமரர்களான எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜி. ஜி பொன்னம்பலம், எம். திருச்செல்வம் ஆகிய தலைவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் தீர்மானம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 17வது ஆண்டறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படாமல் இருந்ததை இக்கிளை வன்மையாகக் கண்டிக்கின்றது. இத்தலைவர்களது நினைவு இச்சங்கத்தின் ஆயுள்காலம்வரை நினைவில் இருப்பதற்கு ஏற்ற வகையில் தாய்ச்சங்க ஆண்டறிக்கையில் இவர்களது அஞ்சலி இடம்பெறச்செய்யவேண்டும்" என்று திரு. நா. பொன்னையாவினல் கொண்டுவரப்பட்ட தனிநபர் தீர்மானமும் மற்றும் சிலவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பின்வருவோர் இக்கிளையின் புதுவருட நிர்வாகிகளாகத் தெரியப்பட்டனர்

தலைவர்: திரு. வீர. வேலாயுதம், உபதலைவர்கள்: திரு. நா. பொன்னையா, திரு. கா. குமரகுரு, செயலாளர்: திரு. நா. சதானந்தன். துணைச் செயலாளர்: திரு. பொ. சுந்தரலிங்கம், பொருளாளர்: திரு. கா. செ. சிவஜாசா.

(வண்-நிரு. அ

என்னைப் பொறுத்தவரை மனிதசமுதாயத்துக்காக மனிதன் தொழில்செய்யும் இடமே பெரிய கோயில், தேவாலயம் மசூதிகள் யாவும்.

—ஜவஹர்லால் நேரு

## என்பாடல் ஏற்றருள்வாய்!

நல்லூர்ப் பதிவளரும் நல்மணியே! சரவணனே!
கல்லாப் பெருமூடன் என்நாவில் நின்றென்றும்
நல்லதமிழ்ப் பாபுனைந்துன் புகழ்பாட அருள்கவென
கல்லாம் என்நெஞ்சம் கனிந்துருகப் பணிகின்றேன்!!

தமிழ்வளர்த்த ஔவைக்கும் தருக்கழித்த முருகோனே!
தமிழார்ந்த உளமுடனே தமிழாலுன் புகழ்போற்றத்
தமிழ்தந்து இசைதந்து தமியேற்குத் துணைநிற்க
தமிழ்வேளே! சண்முகனே! கழலிணைகள்
பணிகின்றேன்!!

தமிழாலுன் திருப்புகழைப் பாடப் பேராசைகொண்டு
தமிழிலுனை வைபவர்க்கும் கனிந்தருளும் செவ்வேளே!
தமிழ்வேளே! பாடுகிறேன் தயங்காது ததையேற்று
தமியேற்கும் உனதருளை என்றென்றும் பொழிவாயே!!

--- முருகு. திருக்கேதீஸ்வரம்



## சீர் நல்லை முருகா போற்றி

அன்றொரு இலங்கை காத்த
ஐந்திரு சென்னி யானை
கொன்றம ரர்க்கு வாழ்வு
கொடுத்துளோன் மருகா! தேவர்
அன்றுனை வேண்டச் சூரன்
அருஞ்சிறை நீக்கிக் காத்தோய்
இன்றுநம் அடிமை நீக்கி
எமக்கீழம் ஈத்தி டாயோ

பண்டுபோல் எம்மை எங்கள்
பாரினை ஆள வைப்பாய்
அண்டியே எங்கள் நாட்டை
அபகரித் தோரை வீட்டி
மண்டியிட் டோடச் செய்வாய்
மால்மரு காவுன் பாதம்
தெண்டனிட் டேத்து கின்றோம்
சீர்நல்லை முருகா போற்றி!

--- மு. வைத்தியலிங்கம்

## நல்லூர்க் கந்தன் சப்பரத் திருவிழா

(இன்று பிற்பகல் 5-45 மணிக்கு நல்லூர்க் கந்தன் சப்பரத் திருவிழா. வேற்பெருமானும் இரு தேவிமாரும் இடப வாகனரூபராய் சப்பரத்திலிருந்து அருள் புரியும் திருக்கைலாயக் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகவிருக்கும்)

"முருகா" ---

"தரணிதனில் அறுபத்துஅறுகோடி தீர்த்தமுன்
சரவணத் துள்ளடக்கம்

சாற்றுமோர் எழுகோடி மந்திரங்களும் உன்
சடாக்ஷரத்துள் ளடக்கம்

விரதமிகு நவகோடி சித்தர்களும் நின்சுப
வீட்சணந்தனில் அடக்கம்

மேலான தேவஆலயங்களும் உன் அறுபடை
வீட்டினுள்ளே அடக்கம்

இரவிமுதல் முப்பத்துமுக்கோடி தேவர்களுன்
இதயகமலத் தடக்கம்

ஈரேழு புவனமுதல் அண்டங்கள் பலவும் உன்
இடத்தினில் அடக்கம் ஐயா

வரிசைமிகு பக்தஜன பரிபாலனுமோக
வள்ளிகுஞ் சரிமணாளா

வனசமல ரயன் மதனையருள் சரசகோபாலன்
மருக சரவண முருகனே!"

--- கவி குஞ்சரபாரதி

# இந்திரா காங்கிரஸின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு காங்கிரஸ் ஆதரவளிக்காது!

## எதிர்க்கட்சித் தலைவர் சவான்

புதுடில்லி, ஆக. 30

ஆளும் ஜனதா அரசுக்கு எதிராக இந்திரா காங்கிரஸ் கட்சி கொண்டுவர இருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு உத்தியோகபூர்வ காங்கிரஸ்ஆதரவளிக்கமாட்டாது.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும் காங்கிரஸ்கட்சியின்தற்காலிகத் தலைவருமான திரு. வை. பி. சவான் தெரிவித்துள்ளார்.

திரு. சவான் இது குறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது என்பது பலம்வாய்ந்த ஆயுதம் ஒன்ருல் அரசைத் தாக்க முற்படுவதற்குச் சமமாகும். அந்த ஆயுதத்தை நாம் அடிக்கடி பயன்படுத்தக் கூடாது.

பிரச்னைகளை தராதரத்தின் அடிப்படையில் அணுகுதையே காங்கிரஸ்கட்சி விரும்புகிறது:

### இந்திரா காங்கிரஸ் குற்றச்சாட்டுக்கு, மறுப்பு

உத்தேச நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு உத்தியோகபூர்வ காங்கிரஸ் ஆதரவளிக்க மறுத்ததைக் காரணமாகக் கொண்டு ஜனதா கட்சிக்கு காங்கிரஸ்கட்சி ஆதரவளித்து வருகிறதென்று இந்திரா காங்கிரஸ்கட்சியினர்குற்றம்சாட்டியுள்ளனர். இக் குற்றச்சாட்டு பொய்யானதும் விஷமத்தனமானதுமாகும். [இ]

## கென்யா அதிபரின் இறுதிச் சடங்கு இன்று

நைரோபி, ஆக. 30

கடந்தவாரம் காலமான கென்யாஅதிபர்திரு.ஜோமோ கென்யாட்டாவின் இறுதிச் சடங்குகள் நாளை வியாழக்கிழமை நைரோபியில் நடைபெறுகிறது.

இம்மாதம் 22ம் திகதி காலமான திரு.கென்யாட்டாவின் பூதவுடலுக்கு நைரோபியில் இதுவரை பெருந்திரளான மக்கள் அஞ்சலிசெலுத்திஞர்கள்.

### இறுதிச்சடங்கில் இந்தியப் பிரதமர்

காலஞ்சென்ற கென்யாட்டாவின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்வதற்காக இந்தியப்பிரதமர் திரு.மொரார்ஜி தேசாய்இன்று கென்யா பயணமாஞர். (இ)

# பிரிட்டனில் மீண்டும் தொழிற்கட்சி அரசு?

## அக்டோபர் 3-ல் தேர்தல் நடக்கலாம்

லண்டன், ஆக. 30

பிரிட்டனில் அக்டோபர் மாதம 5ம் திகதி தேர்தல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது

அடுத்தமாதம் 5ம்திகதிலண்டனில் நடைபெறும் மாநாடு ஒன்றில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளையில் தொழிற்கட்சி அரசே மீண்டும் பதவிக்கு வரலாமென்றும் தொழிற்கட்சிக்கு பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் நல்ல ஆதரவு இருந்துவருவதாகவும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

### காவிரிநீர்ப் பங்கீடு:

## எதிர்க்கட்சித் தலைவர்கள் சகலரும் எம். ஜி. ஆருக்கு ஆதரவு

சென்னை, ஆக. 30

காவிரிநீர் பங்கீடு குறித்து அடுத்தமாதம் 3ம் திகதி புதுடில்லியில் நடைபெறும் தமிழ் நாடு-கர்நாடக-கேரள முதல்வர்களின் மாநாட்டில் மேற்கு நோக்கிப்பாயும் மற்றைய நதிகளின் நீரைப் பகிர்ந்துகொள்வது பற்றி ஆலோசிக்கப்படும்.

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் நீர்ப்பங்கீடு குறித்து ஒருதிர்க்கமானமுடிவு எடுக்கப்படும் எனத்தாம் நம்புவதாகவும் திரு. இராமச்சந்திரன் கூறினுர்.

இது தொடர்பாக நேற்று சென்னையில் நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களும் தமது யோசனையை ஏற்றுக்கொண்டனர் என்றும் டில்லி மாநாட்டுக்குப் பின்னரும் தாம் சகல எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்திக்கவுள்ளதாகவும் எம். ஜி. ஆர். தெரிவித்தார். (இ)

## ரமலான் சிந்தனைகள்

''எவன் வரம்புமீறி (மறுமையைப் புறக்கணித்து) இவ்வுலக வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டானே, அவன் செல்லுமிடம் நரகம் தான். எவன் தன் இறைவனின் சந்நிதியில் விசாரணைக்காக நிற்பதைப் பற்றிப் பயந்து, கீழ்த்தரமான இச்சையை விட்டும் தன்னைத் தடுத்துக் கொண்டானே அவன் செல்லுமிடம் நிச்சயம் சுவனபதிதான்.

அல்குர்ஆன்: 79: 37-41.

தொகுப்பு: ஏ. ஸி. எம். மஸ்ஹூர் - யாழ்நகர்.

## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 15-ந் திகதி

வியாழக்கிழமை

(31-8-78)

**மேடம்:-** அறவழியை நாடுவீர்கள், தெய்வ சிந்தை மேலோங்கி நிற்கும், குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை தென்படும்.

**இடபம்:-** பொருள் வரவில் புதிய திருப்பம் ஏற்படும், முதல் விட்டுச்செய்யும் தொழில் முன்னேற்றத்தைக் குறிப்பிடும், வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்றும் கிடைக்கலாம்,

**மிதுனம்:-** பிரிவின் தாக்குதலால வேதனைப்படுவீர்கள், தற்பெருமைக்காகத் தவருன பாதையில் காலடி எடுத்து வைக்க நேரிடலாம், தொழில் துறையிலும் தயக்க நிலை தென்படும்.

**கடகம்:-** பணவிவகாரத்தில் அதிக் கவனம் செலுத்தவும், தொழில் துறையில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும், எந்த விடயத்திலும் பொதுவாக தடுமாற்றம் ஏற்படும், நாவடக்கம் நன்று.

**சிங்கம்:-** கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சிபிறக்கும், நீண்ட நாள் அபிலாசை இன்று நிறைவேறும்.

**கன்னி:-** எதிலும் அலட்சியமனப்பான்மை தோன்றக்கூடும், சகோதரவழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு, இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு, மௌனம் விருப்பத்தக்கது.

**துலாம்:-** ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும், வாகனத்தின் மூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு, விளை பொருள் விருத்தியும் வியாபார முன்னேற்றமும் உண்டு, நல்லநாள்.

**விருச்சிகம்:-** வசதிகள் பெருகும், வாழ்க்கையும் வளமாகும், தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், இன்றுசுபநாள்.

**தனுசு:-** ஆயுதபீடைக்கு இடமுண்டு, எனவே எதிலும் அவதானம் விரும்பத் தக்கது, அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடம் அளிக்கலாம்.

**மகரம்:-** சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள், சிலருக்கு திடீர்திருமணமும் ஏற்படலாம், மகிழ்ச்சியான தினம்.

**கும்பம்:-** ஏக்கத்தின் சாயல் தாக்கும், அரசபயத்திற்கு இடமுண்டு, மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம், இறை நம்பிக்கை நன்று.

**மீனம்:-** பூமியால் லாபம் உண்டு, புத்திரர் புகழும் உண்டு, காதலர்கள் எண்ணங்கள் கைகூடும், எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## 3 டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து வெற்றி!

லண்டன், ஆக. 30

இங்கிலாந்து கிரிக்கட் கோஷ்டி நியுசிலாந்து கோஷ்டியை 3 டெஸ்ட் தொடரில் 3 டெஸ்ட்டுகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் கோஷ்டியை 3-0 டெஸ்ட்களால் வெற்றியீட்டிய இங்கிலாந்துக்கோஷ்டி காப்டன் மைக் பியர்லி தலைமையில் இப்போது நியுசிலாந்து கோஷ்டியையும் 3-0 டெஸ்ட்களால் வெற்றியீட்டியுள்ளது.

இங்கிலாந்துகோஷ்டி முதலாவது டெஸ்ட்டில் 7 விக்கட்டுகளாலும் 2வது டெஸ்டில் ஒரு இன்னிங்ஸ் 119 ஓட்டங்களாலும் 3வது இறுதி டெஸ்டில் 7 விக்கட்டுகளாலும் வெற்றிபெற்றது.

இதேவேளையில் இவ்வருட இறுதியில் ஆஸ்திரேலியா செல்லும் கிரிக்கட் கோஷ்டிக்கும் மைக் பியர்லி காப்டனுக நியமிக்கப்பட்டுள்ளார். [இ]

## தமிழ் ஈழ பஜனைகுழு நல்லூர் தேர்த் திருவிழாவில் பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமிகோவிலில் தமிழ் ஈழ பஜனைக் குழுவினர், நல்லூர்க் கந்தனிடம் தமிழர் சுதந்திரம் கோரி, இன்று சப்பறத் திருவிழாவின்போதும், மறுநாள் தேர்த் திருவிழாவின்போதும் பஜனை செய்யத் தீர்மானித்துள்ளனர்

பஜனைக் குழுவில் தமிழ்த் தலைவர்களும்இளைஞர்பேரவை மகளிர் பேரவையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும், பொது மக்களும் கலந்துகொள்வர்.

பஜனையில் படிக்கும் பாடல்கள் அனைத்தும், பிரபல பாடலாசிரியர்களால் இயற்றப்பட்டுள்ளன.

பஜனையில் சாதிவேறுபாடின்றி அனைவரும் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்படுமெனத் தமிழர் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (செ-இ)

## விருந்தினர் விடுதியில் திருட்டு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த இரு தென்னிலங்கை வாசிகளிடமிருந்து 500 ரூபா ரொக்கப் பணம் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளது.

வடபகுதிக்கு சுற்றுலா மேற்கொண்டு வந்திருந்த குமார் ரூபசிங்கா, விஜயவிக்கிரம ஆகியோர் மேற்படி விடுதியில் தங்கியிருந்த சமயம் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

இதுகுறித்து காங்கேசன் துறைப் பொலிசில் செய்யப்பட்ட புகாரின்பேரில் பொலிசார் மேற்படி விடுதி ஊழியர்கள் இருவரை சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குட்படுத்தியதுடன் தொடர்ந்து விசாரணையிலீடுபட்டுள்ளனர். (உ)

## பாராட்டு

[சுழிபுரம்]

ஆருயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியொன்றை தொல்புரத்தைச் சேர்ந்த திரு. எஸ். கோபாலரத்தினம் என்பவர் பொன்னாலைத் தேர்த்திருவிழா அன்று கோயில் முன்பு கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்து பாராட்டுப்பெற்ருர். பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயில் அர்ச்சகர் ஒருவரின் மனைவியே தாலிக்கொடியை தவற விட்டவராவர் இவர் தமது வீட்டிலிருந்து கோயில் வரும்வரை தமதுகழுத்தில் தாலிக்கொடி இருக்கக்கண்டதாகவும் பின்னர் அது தவறுதலாக கீழே விழுந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ]உ[

## வெள்ளத்துக்கு 93 பேர் பலி!

புதுடில்லி, ஆக. 30

பீகாரில் வெள்ளத்துக்குப் பலியானேர் தொகை 93 பேராக அதிகரித்துள்ளது. [இ[

## ஈரானில் 1979ல் தேர்தல்

தெஹ்ரான், ஆக. 30

ஈரானில் அடுத்த ஆண்டில் சுதந்திர பாராளுமன்றத்தேர்தல் நடைபெறும்.

புதிய பிரதமர் ஜஃபர் ஷெரிப் இமாமி மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார். (இ)

## படகு விபத்து 10 பேர் பலி!

புதுடில்லி, ஆக. 30

உத்தரப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற படகு விபத்தொன்றில் 10 பேர் பலியாகியுள்ளனர்.

6சடலங்கள் ஆற்றிலிருந்து மீட்கப்பட்டன. (இ)

## நல்லூரில் சமய நூல் விற்பனைநிலையம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் திருவிழாவை முன்னிட்டு இலங்கை ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் ஆதரவுடன் நல்லூர்அரசடிச்சந்தி பாரதிசிலைக்கருகில் சமய நூல்களும் கைப்பணிப் பொருட்களும் விற்கப்படும் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தைத் தொழில் அதிபர் திரு.கே. கனகராஜா தபபதிகள் திறந்து வைத்தனர். [உ[

## அகதிகள்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி[

பறங்கியாமடு ரூ. 43ஆயிரத்து 300,இருல்ஒடை ரூ.5 இலட்சத்து 83 ஆயிரம், சவுக்கடி ரூ. 92 ஆயிரம்,

மேற்படி நிதி ஒதுக்கீடு, வேலைத்திட்ட செயற்பாடு பற்றிய கூட்டம் சர்வோதய பதில் தலைவர் திருமதி சீதா இராஜசூரிய தலைமையில் மொரட்டுவையிலுள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.இதில்'ஹெலிட்டா' பிரதிநிதி திரு. தொமஸ் சீமென் உட்பட மற்றும் நிர்வாக முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (உ)

## மண்ணெண்ணை தட்டுப்பாடு

(உருத்திரபுரம்)

கிளிநொச்சியில். மண்ணெண்ணை, டீசல் போன்றஎரி பொருட்களுக்கு மிகவும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் பொது மக்களுக்கு குறிப்பிட்ட அளவே விநியோகிக்கப்படுகிறது. இதனால் விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். (உ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி - பிரமிளா
மனிதரில் மாணிக்கம்

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
KARATE AMAZONS
From: Tomorrow
FRIDAY FOSTER
(adults only)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி

## கூட்டணிக் கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

தமிழர்விடுதலைக் கூட்டணியின் இரு கருத்தரங்குகள் 2ம் திகதி ஆனைக்கோட்டையிலும் 3-ம் திகதி புங்கங்குளத்திலும் நடைபெறவுள்ளன.

ஆனைக்கோட்டைக் கருத்தரங்கில் திரு. ஈழவேந்தன் 'எமக்கு எதிர்காலம் உண்டா?' என்ற தலைப்பிலும் திரு. கோவை மகேசன் 'உலக அரங்கில் எமது விடுதலைப் போராட்டம்' என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தவுள்ளனர். திரு சி. ஆறுமுகம் தலைமை வகிப்பார்.

புங்கங்குளக் கருத்தரங்கு திரு, ஜே. எஸ். அருளையா தலைமையில் நடைபெறும்.

திரு. வி. பொன்னம்பலம், திரு. சி. கதிரவேலுப்பிள்ளை எம். பி., திரு. வி. யோகேஸ்வரன் எம். பி., ஈழவேந்தன், யோசேப் மேரி ஆகியோர் உரையாற்றுவர். (உ)

## மண்டைதீவு ம.வி. இல்லப்போட்டி

(வண்ணார்பண்ணை)

மண்டைதீவு மகாவித்தியாலய 1978ம் ஆண்டுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் கல்லூரிமைதானத்தில் நடைபெற்றன.

இவ்வைபவத்தில் தீவுப் பகுதி எம்.பி. திரு.கா பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூன்று இல்லங்களாக போட்டிகள் இடம்பெற்றன. (அ)

REGAL Jaffna 3rd CROWDED WEEK
Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞயிறு 4 காட்சிகள்
வீட்டு மாப்பிள்ளை
(புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்) போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
தீர்க்க சுமங்கலி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பெரும் புகழும்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
கடைசி வாரம்
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சாவித்திரி
ம கா தே வி [புத்தம் புதிய பிரதி]
3-9-78 முதல் மருதநாட்டு வீரன்

ராணி (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்டமன் கலர்)

ஸ்ரீதர் (யாழ் நகர்) இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி பத்மினி
நடித்த
இருமலர்கள்
(புதியபிரதி)

"கடந்த தேர்தலில் ஐக்கிய இலங்கையை விரும்பும்

# குமார் பொன்னம்பலமே வெல்லுவார் என நம்பினேன்

## சன்சோனி கமிஷன் முன் நாகவிகாரைதேரோசாட்சியம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்ட திரு. வி. யோகேஸ்வரன்! சுயேச்சையாகப் போட்டியிட்ட டாக்டர் தர்மலிங்கம் ஆகியோரைத்தவிர அங்கு போட்டியிட்ட திருவாளர்கள குமார் பொன்னம்பலம், சி. எக்ஸ். மார்ட்டின், டாக்டர் ஏபிரகாம், ராஜசூரியர் ஆகியோர் தமக்கு வாக்குக் கேட்பதற்காக நாகவிகாரைக்கு வந்தனர். அத்தேர்தலில் ஐக்கிய இலங்கையை விரும்பும் திரு.குமார் வெற்றிபெறுவார் என நம்பினேன்''

இவ்வாறு யாழ். நாகவிகாரையின்பிரதமகுரு வண. கடவத்துவ நந்தாராமதேரோ நேற்றுமுன்தினம் சன்சோனிக்கமிஷன் முன் சாட்சிய மன்க்கையில் கூறினார்.

காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், நயினாதீவு ஆகிய இடங்களில் பௌத்த விகாரைகள் உண்டென்றும்கடந்தகலவரத்தின்போதுஇவற்றில் எந்த விகாரையும் சேதப்படுத்தப்படவில்லை என்றும் யாழ்ப்பாணத்தில் சிங்களவர் எவரும் கொலை செய்யப்படவில்லை என்றும் தாம் அறிந்த வரையில் பெண்கள் எவரும் முறைகேடாக நடத்தப்படவில்லை என்றும் தேரர் கூறினார்.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. அண்டலூட்மணிவாசகம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி மேலும் கூறியதாவது:

யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்திற்கான தேவைகள் எதையும் நான் கல்வி மந்திரியிடம் கேட்கவில்லை. அப்போது கல்வி மந்திரியாக இருந்த அல்ஹாஜ் டாக்டர் பதியுதின் மஹ்முத் பௌத்தர் அல்லாதவர் என்ற காரணத்தினாலேயே அவரிடம் இதுபற்றிக் கேட்கவில்லை.

சட்: அப்போது யாழ். எம். பியாக இருந்தவர் திரு. மாட்டின் தமிழர் கூட்டணியைச் சேர்ந்தவர் அல்ல

சாட்சி: அவர் தமிழரசுக் கட்சி எம். பி.

சட்; அவர் பின்னர் சுயேச்சையாக இயங்கினார்.

சட்: பிரதிக்கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவ செயலாளர் டாக்டர் பிரேமதாச உடகம ஆகியோர் பௌத்தர்களாக இருந்தும் நீர்சிங்களபாடசாலை அபிவிருத்திபற்றி எதுவும் கேட்கவில்லை.

சாட்சி; உள்ளூர் எம்.பிக்களினதும் அதிகாரிகளினதும் ஆலோசனையின்படியே அவர்கள் நடப்பார்கள் என்பதனால் அவர்களிடம்? கேட்கவில்லை.

சட்: கல்விஅமைச்சரைவிட அதிக அதிகாரம் கொண்டவரும் பௌத்தசிங்கள கலாச்சாரத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தவருமான திருமதி பண்டாரநாயக்காவிடமும் கேட்கவில்லையா?

சாட்சி: இல்லை.

சட்; சிங்கள மக்களின் பெரும்பான்மையைப் பெற்றவரும் அதிககாலம் பிரதமராக இருந்தவருமான திருமதி பண்டாரநாயக்கவிடம் கூடகேட்கவில்லையா?— இல்லை

அரசதரப்பு சட்டத்தரணி தென்னக்கோன் நான் இதை ஆட்சேபிக்கிறேன் அரசின் பதவிக்காலத்தை 7 வருடகாலத்திற்கு நீடித்தமையினாலேயே அவர் அதிககாலம் பிரதமராக இருந்தார்.

அண்டலூட்: அந்த 2 வருடத்தை கழித்தால்கூட அவரே அதிககாலம் பதவிவகித்திருக்கிறார்?-ஆம்

சட்: டாக்டர் பதியுதீன் பௌத்த சிங்களவராக இல்லாததினால் சிங்களவருக்கு எதிராக செயல்பட்டாரா?

சாட்சி: அமைச்சர் என்ற ரீதியில் சகலருக்கும் சரிவர தமது கடமையைச் செய்தார்.

### தமிழாராய்ச்சி மகாநாடு...

சட்; 72ம் ஆண்டு யாழ்நகரில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாடு பற்றித் தெரியுமா?-தெரியாது

சட்: உலக நாடுகளின் அறிஞர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் கூடி இருந்தது தெரியுமா?-தெரியாது

சட: யாழ்ப்பாணத்தில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கூடியிருந்தது தெரியுமா?-

சாட்சி: தெரியாது அதில் எனக்கு அக்கறை இல்லை. அதுபற்றி கேள்விப் பட்டதாகவும் ஞாபகமில்லை.

சட்; தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது 9 பேர் மின்சாரத்திற்குப் பலியானார்கள் என்பது தெரியுமா?-ஞாபகமில்லை.

சட்: ஆகஸ்ட் கலவரத்தின் போது எங்கிருந்தீர்.

### கலவர காலத்தில் யாழ்ப்பாணத்திலேயே இருந்தேன்

சாட்சி: கலவர காலத்தில் ஆகஸ்ட் 16ம் திகதி முதல் 20ம் திகதிவரை யாழ்ப்பாணத்திலேயே இருந்தேன். 20ம் திகதி பஸ்ஸில் அனுராதபுரம் போனேன்.

யாழ் விகாரையில் 50க்கும் அதிகமான பொலிஸார் கலவர காலத்தில் அகதிகளாக இருந்தனர்.

ஏ. எஸ். பி. நூர்டீன், ஏ. எஸ். பி. வீரரத்ன ஆகியோரைத் தெரியும் அவர்கள் விகாரைக்கு வருவார்கள்.

### எஸ். பி. சுந்தரலிங்கம்

சட்: 67 முதல் 72 வரை எஸ். பி. திரு. ஆர். சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினார் - ஆம்.

சட்: உமக்கு வேண்டிய உதவிகளை அவர் செய்துதருவார்-ஆம்.

சட்: விகாரையில் நடக்கும் விழாக்களுக்கு உதவி செய்வார்-ஆம்.

சட்: திரு. சுந்தரலிங்கம் தமிழராக இருந்தபோதிலும் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடக்கும் பௌத்த விழாக்களுக்கு உதவினார்-ஆம்.

சட்: யாழ். நகரில் பெரஹரா நடத்த உதவினார்-ஆம்.

சட்: தமிழரானாலும் சிங்களவருக்கு எதிராக இயங்கினாரா.

சாட்சி: இல்லை. அவ்வாறு இயங்கவில்லை.

சட்; 77 ஆகஸ்ட் 19ம் திகதி திரு. சுந்தரலிங்கம், திரு. ருத்ரா ராஜசிங்கம் ஆகியோர் யாழ். விகாரைக்கு வந்தனர்-ஆம்

### அமிரைத் தெரியுமா?

சட்: திரு அமிர்தலிங்கத்தைத் தெரியுமா'

சாட்சி: யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திரு. எஸ் ஜே விக்கு அஞ்சலி செய்யப்போனபோது திரு. அமிர்தலிங்கத்தைச் சந்தித்துப் பேசினேன்.

சட்: திருமதி அமிர்தலிங்கத்தைத் தெரியுமா?

சாட்சி; யாழ். முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடந்த விழா ஒன்றில் சந்தித்தேன். ஆனால் கதைக்கவில்லை.

சட்: யாழ். எம். பி. திரு வி. யோகேஸ்வரனைத் தெரியுமா?

சாட்சி: தெரியும் கதைக்கவில்லை. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையுடனும் திரு. வி. என். நவரத்தினத்துடனும் ஒருமுறை கதைத்துள்ளேன் மற்றைய கூட்டணி எம். பி. க்களைத் தெரியாது.

சட்; தமிழர் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரத்தைத் தெரியுமா?-தெரியாது.

சட்: திரு. அருளம்பலத்தை தெரியுமா?-ஆம்.

சட்: அவர் அரசியல் அதிகாரியாக இருந்தார் என்பது தெரியுமா?-தெரியாது.

சட்: சுதந்திரக்கட்சி ஆதரவாளர் என்பதனாலேயே அவர் சுடப்பட்டார்?-தெரியும்.

(ம-இ)

## புதியபஸ் சேவை

(பண்டத்தரிப்பு)

காரைநகரிலிருந்து காங்கேசன்துறைக்கு புதிய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காரைநகர் இ.போ. ச. டிப்போவினால் நடாத்தப்படும் இப்புதிய பஸ்சேவையை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

பாதை இலக்கம் 343என்று குறிப்பிட்டுள்ள இப் பஸ் சேவை காரை நகரிலிருந்து ஆரம்பமாகி சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், அளவெட்டி, மல்லாகம், தெல்லிப்பழை ஆகிய கிராமங்களுக்கு ஊடாகச் சென்று காங்கேசன்துறை பஸ் நிலையத்தை அடைகின்றது. (எ)

## வருடாந்த சமய பாடப் பரீட்சை

(வட்டுக்கோட்டை)

காரைநகர் மணிவாசகர் சபையின் 38வது வருடாந்தப் பொதுக்கூட்டம் பண்டிதர் திரு. சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது கடந்த வருடங்களைப்போன்று இம்முறையும் காரைநகர்ப் பாடசாலைகளுக்கிடையே சமய பாடப் பரீட்சையை நடத்துவதென்றும் மார்கழித் திருவாதிரை தினத்தில் நடத்தப் பெறும் மணிவாசகர் விழாவை சிறந்தமுறையில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சபையின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர் -

தலைவர்: பண்டிதர் சு. வேலாயுதபிள்ளை, உபதலைவர்: வி. தேதீஸ்வரதாசன், செயலாளர்; க சிவகுமரன, உபசெயலாளர்: ம. அழகேந்திரன், பொருளாளர்: க. கணேசபிள்ளை.

பரீட்சை ஒழுங்குகளைக் கவனிப்பதற்கு மூவர் கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டத[illegible])

# கிளிநொச்சி கமத்தொழில் வங்கியை மூட வேண்டாம்

## விவசாயிகள் ஆட்சேபம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக் கமத்தொழில் வங்கி மூடப்படுவதற்கு இப்பகுதி விவசாயிகளும் குறிப்பாக இளம்விவசாயிகளும் விவசாயப்பகுதி உத்தியோகத்தர்களும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இதுசம்பபந்தமாகத் தொகுதி எம். பி.க்கும் வடமாநில வங்கி முகாமையாளருக்கும் வங்கி மேலிடத்துக்கும் இவர்கள் கடிதமூலம் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.

இவ்வங்கிமூலம் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பயனடைந்து வந்ததாகவும் வங்கி மூடப்படும்பட்சத்தில் விவசாயிகள் கஷ்டத்திற்குள்ளாக நேருமென்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

வடபகுதியில் இவ்வங்கியே கூடுதல் விவசாயக் கடன்களை இதுவரை வழங்கியுள்ளதாகவும் கூடுதல் கடன்களை அறவிட்டுள்ளதாகவும் தெரிகிறது.

கிளிநொச்சிக் கமத்தொழில் வங்கியில் மோசடி நடைபெற்றுள்ளதாக அதன் மனேஜரும் காசாளரும் கொழும்புக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருவதும், அன்றுதொடக்கம் இவ்வங்கி மூடப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

வங்கி மூடப்படுவதற்கு யார் என்ன எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும் இவ்வங்கி மீண்டும் திறக்கப்படமாட்டாதென்றே விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## செருப்பையும் திருடினராம்

[பண்டத்தரிப்பு]

நள்ளிரவு வேளையில் அரசினர் வைத்தியசாலையிலுள்ள அறை ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்குள்ள அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த மேற்படி வைத்தியசாலையில்கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவருக்குச் சொந்தமான சேலைகளையும், செருப்புகளையும் திருடிக் கொண்டு சென்றுவிட்டனராம். மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற இத்துணிகர சம்பவம் பற்றி வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ரி.கோபாலசிங்கம் ஆனைக்கோட்டைப் பொலிஸ்நிலையத்தில் புகார் செய்துள்ளார், பொலிசார் இச்சம்பவம் பற்றிப் புலன் விசாரணை செய்துவருகின்றனர். (அ)

## 'புளுகர்கள் ஜாக்கிரதை'

# படப்பிடிப்பு ஆரம்பம்;

## எதிர்க்கட்சித் தலைவர் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

'சோதனைகள் மத்தியிலும் இன்று தமிழ் மக்கள், தங்கள் பாரம் பரியகலையை அண்மைக்காலமாக வளர்ப்பதில் பெரும் ஆர்வம் கொண்டு உழைத்து வருகின்றனர். அதனை நான் பாராட்டுகின்றேன், என, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 'புளுகர்கள் ஜாக்கிரதை' திரைப்படப் ஆரம்பவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

விழாவிற்கு முன்னாள் சங்கானைப் பட்டினசபைத் தலைவர், திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் தலைமைவகித்தார். ஆரம்பவிழாவினையொட்டி, யாழ். முனீஸ்வரன் ஆலயத்தில் 'புளுகர்கள் ஜாக்கிரதை' திரைப்பட ஆரம்பபூஜை நடைபெற்றது.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் எதிர்கால சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணி இன்று இளைஞர்களையே சார்ந்துள்ளது. இப்பொறுப்பை சகல வழிகளிலும், திறம்படச் செய்ய இளைஞர்கள் கட்டுக்கோப்பாக செயல்படவேண்டும். அப்போதுதான் எமது மொழி, கலை, பண்பாடு, நல்ல முறையில் பேணப்பட்டு நாம் சுதந்திர புருஷர்களாக, வாழ முடியும் என்றார்.

செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் உரையாற்றுறையில், 'நாட்டிலுள்ள கலைஞர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச்சங்கங்களை நிறுவி கலையை வளர்க்கவேண்டும். இப்போது தமிழ்மக்கள் தமிழ் ஈழக்கோரிக்கைக்காகபோராடினாலும், ஒருபுறம், கலைக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும் என்றார்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ உரையாற்றுகையில் அரசாங்கத்தின் கொள்கைப்படி எந்தக் கலைஞர்களும் புறக்கணிக்கப்படமாட்டார்கள். தமிழராயிருந்தாலும் சரி, சிங்களவராயிருந்தாலும் சரி, முஸ்லிம் சமூகத்தவராயிருந்தாலும் சமவாய்ப்பு அளிக்கப்படும். எனவே தமிழ்க்கலையை வளர்ப்பதில் அரசு ஒருபோதும் பின்நிற்காது. அதற்கான உதவிகளைப் பெற்றுத்தருவதில் நான் முன்நிற்பேன். யாழ். நகரில் சகல கலைஞர்களிடத்திலும் பரஸ்பர நல்லெண்ணம் உருவாகுவதற்கே திரைப்படவிழாவை ஏற்படுத்தினேம் என்றார்.

விழாவில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் உட்பட பலர் உரையாற்றினர்: (கெ)

## மானிப்பாய்த் தொகுதி

# மீனவர் பிரச்னைகள் தீர்க்கப்படும் அறிகுறி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்த் தொகுதிக்குள் இருக்கும் நவாலி, சாவற்கட்டு. சுதுமலை, உயரப்புலம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்களின் பிரச்னைகளையிட்டு கடற்தொழில் அமைச்சரின் அந்தரங்க செயலாளருடன் மானிப்பாய்த்தொகுதியில் ஐ. தே. கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. ஆர். எஸ். அலோசியஸ் நடாத்திய பேச்சுவார்த்தையின்போது பின்வரும் விஷயங்கள் சம்பந்தமாக முக்கிய நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிகள் நடப்பதாகத்தெரியவருகிறது.

மானிப்பாய்த் தொகுதிக்கெனத் தனியான மீன்பிடிக் கூட்டுறவுச்சங்கம் அமைத்தல்; மீன்பிடி வெளியிணைப்பு இயந்திரத்துக்கு விண்ணப்பித்த மீனவர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்களைக் காலதாமதமின்றி வழங்க ஒழுங்குகளைச் செய்தல்; பண்டத்தரிப்பு மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்த மீனவர்களின் பீக்ஸ்,, ஸி. ஆர். ஏ. போன்றவற்றைச் சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கு மீளக் கொடுத்தல்; மானிப்பாயில் மீன் விற்பனைநிலையம் ஒன்றை விரைவில் அமைத்தல்; கடந்த கால ஆட்சியில் பண்டத்தரிப்பு மீன்பிடிக் கூட்டுறவுச் சங்க நிர்வாகம் சம்பந்தமாக ஒரு விசாரணைக்குழுவை விரைவில் நியமித்தல் முதலான விஷயங்களை கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டுவந்து ஆவன செய்வதாக அமைச்சரின் அந்தரங்க செயலாளர் ஆர்.எஸ். அலோசியஸ்ஸிடம் உறுதி அளித்ததாகவும், நவாலி சென் பீற்றர்ஸ் கடற்தொழிலாளர் சங்கக் கிளையைச் சேர்ந்த திரு. ம. பாலநாதனும் மேற்படி பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டதாகவும் தெரியவருகிறது. (அ)

## அஞ்சல் எழுதுவினைஞர் சங்க

# 14வது மாநாடு

## கிளிநொச்சியில் நடக்கும்

(கிளிநொச்சி)

அஞ்சல் எழுது வினைஞர் சங்கத்தின் மாநாடு இம்முறை கிளிநொச்சி நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

எதிர்வரும் 4-ம் திகதி கிளிநொச்சி நகரமண்டபத்தில் இம் மாநாடு நடைபெறும். சங்கத்தின் 18-வது மாநாடு இதுவாகும்.

இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் இம் மாநாட்டின் முக்கிய அம்சமாயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

உயர்ந்துவரும் வாழ்க்கைச் செலவுக்கெதிராக எதிர்காலத்தில் சங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாநாட்டில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படுமென்றும் தெரியவருகிறது. (அ)

## வளாகப் புதிய மாணவர்களுக்கு பழகுமுறைப் பயிற்சி

### பேராசிரியர் வித்தியானந்தன் தகவல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழக வளாகத்துக்கு அனுமதிக்கப்படும் புதிய மாணவர்களுக்கு முதல்வாரம் ஏனையோர்களுடன் பழகும் முறை, பல்கலைக்கழக நடைமுறைகள் என்பனபற்றிய பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது.

இத்தகவலை யாழ். தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்தார்.

புதிய மாணவர்களை வரவேற்று யாழ். வளாகத்தில் நடைபெறும் வைபவத்தில் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஸ்ரான்லி கல்பகே, உபவேந்தர் திரு. பி. பீ. ஜி. எல். சிறிவர்த்தனு, பல்கலைக்கழக பதிவாளர் திரு. விஜேரத்னபண்டா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர். கலை, விஞ்ஞானப் பிரிவுகட்கு அனுமதி பெறும் 450 தமிழ் மாணவர்களுக்கே மேற்படி பயிற்சி வகுப்பு நடைபெறஉள்ளது. இதில் பல்கலைக்கழக மாணவரின் பெற்றோரும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். செப்டம்பர் 25ந் திகதி ஆரம்பமாகும் மேற்படி பயிற்சி வகுப்பு ஒருவாரம் நடைபெறும்.

ஏனைய வளாகங்கள் பலவற்றிலும் இத்தகைய பயிற்சி வகுப்புகள்நடைபெறவுள்ளது. முதலில் யாழ். வளாகத்தில் தான் இத்தகைய பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது.

இப்பயிற்சி வகுப்பு முடிவடைந்ததும் அக்டோபர் 3ம் திகதி விரிவுரைகள் ஆரம்பமாகும். (ச-உ)

## 'ராகிங்'' பற்றிய விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாக மருத்துவ பீடத்தில் அனுமதிக்கப்பட்ட புதிய மாணவர்களை 'ராகிங்' செய்ததாகக் கூறப்படும் மாண்வர்கள் மீது தமது விசாரணையை வளாகத் தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன்மேற்கொண்டுள்ளார்.

சம்பவத்தையடுத்து மேற்படி மாணவர்கள் உடனடியாக வளாகத்தை விட்டு காலவரையறையின்றி நீக்கப்பட்டிருந்தனர். இவர்கள்மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு நிரூபிக்கும் பட்சத்தில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்று தெரிய வருகிறது.


## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பற்பொடித் தொழிற்சாலைக்கு பெண் வேலையாட்கள் தேவை. சனிக்கிழமை காலையில் 8-00 மணி தொடக்கம் 11 மணிக்கிடையில் நேரில் சமூகம் தரவும். வ. சிவனடியார், மே/பா. நாவலடி ஒழுங்கை, கவிதா இன்டஸ்றீஸ், திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி. 0202


## முரசுமோட்டையில் தனியாக வாழ்ந்தவர்

### பிணமாக கண்டுபிடிப்பு

(கிளிநொச்சி)

சிலகாலமாகத் தனியாக வீட்டில் வசித்துவந்த ஒருவர் அவ் வீட்டிலேயே பிணமாகக் கண்டுபிடிக்கப்பட்டார். முரசுமோட்டையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆறு பிள்ளைகளின் தந்தையான இந் நபரின் சடலம் அழுகிய நிலையிலேயே காணப்பட்டது.

இவரது வீட்டிலிருந்த சைக்கிள், கடிகாரம், முதலான பொருட்களும் திருடப்பட்டுள்ளதால் இது ஒரு கொலையாக இருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது.

காலஞ்சென்றவருக்கும் மனைவிக்குமிடையில் பணம் சம்பந்தமான தகராறு ஏற்பட்டு மனைவியும் பிள்ளைகளும் வவனியாவில் வசித்துவந்ததாகவும் கூறப்பட்டது. இவர்கள் அழைக்கப்பட்டுப் பொலிசார் விசாரணை செய்துவருவதுடன் திருட்டுத்தான் இவரது மரணத்திற்குக் காரணமாயிருக்குமா என்றும் பொலிசார் சந்தேகிக்கின்றனர். எனினும் இது கொலையா? தற்கொலையா என்பது இதுவரை தெரியவில்லை.

மரணவிசாரனை நடைபெறுகிறது. (அ)

## பாப்பரசர்...

(1ம் பகக்த் தொடர்ச்சி)

வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். (இ)


## திருமண அழைப்பு

நிகழும் காலயுக்தி ஆண்டு, ஆவணித் திங்கள் பத்தொன்பதாம் நாள் (4-9-78) திங்கட்கிழமை பகல் 11-32 முதல் பிற்பகல் 1-02 வரையுள்ள விருச்சிக இலக்கின சுபவேளையில்

| | |
|---|---|
| எனது புதல்வன்<br>திருநிறை செல்வன்<br>சற்குருநாதன்<br>[பொறியியலாளர், இயந்திரசாதன திணைக்களம்]<br>அவர்களுக்கு | எமது புதல்வி<br>திருநிறைசெல்வி<br>கிருபாவதி<br>அவர்களை |

பருத்தித்துறை வியாபாரிமூலையிலுள்ள மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய திருவருள் கூடியிருப்பதால், அத்தருணம், நண்பர்கள் உறவினர் யாவரையும் சுற்றஞ்சூழச் சமூகமளித்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

திருமதி சௌந்தராம்பிகை கனகசபாபதி
253, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சு. பெ. மு. கனகசபாபதி
[உரிமையாளர்:
சு. பெ. முருகுப்பிள்ளை & சன்ஸ்,
கண்டி, மாத்தளை ]

திருமதி பத்மாவதி கனகசபாபதி
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

[0198]



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 389 - Registered as a Newspaper in SriLanka